★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 பங்குனி 9 ரபி-ஆகி 23 இதழ்: 40

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 23-3-79

காதுகேட்பது சிரமமாக இருக்கிறதே என்பது ஒரு குறையாக இருக்கிறதா?

ஃ குடும்பத்தினருடன் சேர்ந்து மகிழ றியோனட் (RIONET) காது கேட்கும் கருவிகளைப் பாவியுங்கள். நேரில் வந்து பரீட்சித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும்

சகல வைபவங்களுக்கும் ஏற்ற பரிசுப் பொருட்கள், நூல் வகைகள், ஆகியவற்றுக்கு நாடவேண்டிய இடம்

இருபா இவ்ற் கவுஸ்

KIRUBA GIFT HOUSE,

சோதிட விலாஸ் கட்டிடம்

46, பெரியகடை - யாழ்ப்பாணம்.

## மன்னிப்புக் கேட்ட பாரதப் பிரதமர்!

[புதுடில்லி]

சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் பற்றி இந்தியப் பாராளுமன்றத்தில் வெளியான தகவல் குறித்து பாரதப்பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் நேற்று மாலை மன்னிப்புக்கேட்டார்!

இந்திய பாராளுமன்றக் கூட்டம் நேற்று நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சபாநாயகர் திடீரென 'சுதந்திரத்தின் அழியாச் சின்னமாக விளங்கிய ஜெயப்பிர

[6-ம் பக்கம் பார்க்க]

OF SRI LANKA RECEIVED 1979-3-23 PERIODICALS DIVISION

## ★ வல்வெட்டித்துறையில் சம்பவம்:

# இளைஞரின் துப்பாக்கிசூட்டுக்கு பொலிஸ் கான்ஸ்டபிள் பலி!

## கூடவந்தவர் தப்பினர்

(யாழ்ப்பாணம்) மட்டக்களப்பைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிளான கு. சிவநேசன் வல்வெட்டித்துறையில் நேற்று முன்தினமிரவு 8 மணிக்கு துப்பாக்கி ஏந்திவந்த இளைஞர்களினால் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானர். அவருடன் வந்த மற்றொரு கான்ஸ்டபிள் ஓடித் தப்பினர்.

நேற்றுமுன்தினமிரவு வல்வெட்டித்துறைப் பொலிஸை சேர்ந்த சிவநேசனும் மற்றொரு சிங்கள கான்ஸ்டபிளும் 'ஸ்கூட்டரில் வல்வெட்டித்துறை உடுப்பிட்டி வீதியிலுள்ள சாராயத்தவறணைக்கு சாதாரண உடையில் வந்ததாகவும், அப்பொழுது இச்சம்பவம் நடந்ததாகவும் கூறப்படுகிறது.

### ஸ்கூட்டரில் வந்தனர்

'ஸ்கூட்டரின் பின் ஆசனத்திலிருந்து சாராயத் தவறணை நோக்கி, சிங்களப் பொலிஸ் கான்ஸ்டபிள் இறங்கி சென்ற சமயம் மூன்று இளைஞர்கள் கைத்துப்பாக்கிகளுடன் வந்து ஸ்கூட்டரிலிருந்த சிவநேசனை சுட்டார்களென்றும் கூறப்படுகிறது மற்ற கான்ஸ்டபிளையும் இளைஞர்கள் சுட முயன்றபோது அவர் தவறணைக்குள் தடபித்து ஓடிவிட்டாரென்றும் கூறப்படுகிறது.

உடனடியாக அவர் ஸ்கூட்டருடன் விழுந்தாரென்றும், இளைஞர்கள் இருளில் ஓடி மறைந்தார்களென்றும் கூறப்படுகிறது.

### ஆறு காயங்கள்

நெற்றி, மூக்கு, நெஞ்செலும்பு, விலா ஆகிய இடங்களில் 6 காயங்கள் காணப்பட்டன.

காங்கேசன்துறை பொலிஸ் அதிபர் திரு. லியோ பெரோரா உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஸ்ருதுபாலா ஆகியோர், சம்பவம் நடந்த இடத்திற்கு

[6ம் பக்கம் பார்க்க]

## மற்றுமொரு துப்பாக்கி சூடு

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறையில் நடந்த மற்றொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வெரகர இ. போ. ச. உத்தியோகத்தரான ஐயாத்துரை தியாகலிங்கம் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் பொலிஸாரும் இராணுவத்தினரும் 8 மணியளவில் நடந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கொலைதொடர்பாக விசாரணை நடத்திக் கொண்டிருந்தபோது இந்த இரண்டாவது சூட்டுச்சம்பவம் நடந்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சிப் பிரமுகரும் தொழிலதிபருமான ஒருவரின் உறவினரான ஐயாத்துரை தியாகலிங்கம் கொழும்பிலிருந்துவந்த ஒரு கோஷ்டியினருக்கு அவரது வீட்டில் இராப்போசன விருந்தளித்துக் கொண்டிருந்தபோது இச்சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற தாக்குதலில், இ. போ. ச. சாரதியான தனபாலசிங்கம் என்பவர் கால் முறிந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பஸ் பிரயாணிகள் மீது பொலிஸார் நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதலின்போது

[6-ம் பக்கம் பார்க்க]

## நேற்றுப் பிற்பகல் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம்

[யாழ்ப்பாணம்]

பொலிகண்டியில் நேற்று பிற்பகல் 4 மணிக்கு நடந்ததுப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து அவசரமாக யாழ். பெரிய ஆஸ்பத்திரில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

திரு ரி அமிர்தலிங்கம் என்பவர் குளித்துக் கொண்டிருந்தபோது இரு இளைஞர்கள் துப்பாக்கியால் சுட்டதால், காயமேற்பட்டதாக கூறப்படுகிறது.

அவர் குளித்துக் கொண்டிருந்த சமயம் இரு இளைஞர்கள் வந்து குடிக்க தண்ணீர் கேட்டதாகவும், அவர் சந்தேகப்பட்டு, குளித்த குறையுடன் ஓடியபோது இளைஞர்கள் சுட்டுவிட்டு ஓடி மறைந்ததாகவும் கூறப்படுகிறது.

அமிர்தலிங்கம் அவசர சத்திரசிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இன்னும் மயக்கம் தெளியாத நிலையில் இருக்கிறார்.

பொலிஸார் இச்சம்பவம் தொடர்பாக, வீடுகளிலும், சோதனை நடத்திவருகின்றனர். [கொ]

தமிழகத்தில் விரிவான வரவேற்புகள்;

## அமிர் ஏப். 3க்குப் பின்னரே தாயகம் திரும்புவார்

சென்னை, மார்ச் 22

இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தம்பதிகளுக்கு தமிழ் நாட்டில் மேலும் பல இடங்களில், வரவேற்புகள், சிறப்பு சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் கலந்துரையாடல்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால், ஏப்ரல் 3ம் தேதிக்கு பின்னரே இலங்கை திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றுக்காலை மீனம்பாக்கம் விமானநிலையத்திலிருந்து டில்லி சென்ற திரு. அமிர்தலிங்கம் தம்பதிகளை விமான நிலையத்தில் தி மு க, அ தி மு. க. பிரமுகர்கள், திரு. ஜனார்த்தனன் ஆகியோர் வழியனுப்பிவைத்தார்.

### எம். ஜி. ஆர் ஏற்பாடு

திரு. அமிர்தலிங்கத்தின் டில்லி விஜயத்தையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரன் இரண்டு நாட்களுக்கு முன்னரே அமைச்சர் ராஜாராமை டில்லிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

திரு. அமிர்தலிங்கம் தம்பதிகள் டில்லியில், பாரத வெளிவிவகார அமைச்சர் திரு. வாஜ்பாயின் விருந்தினராக தங்கி

[6-ம் பக்கம் பார்க்க]

## மன்னாரில் தேடுதல்வேட்டை

[மன்னார்]

பூநகரியில் நடந்த 20 000 ரூபா கொள்ளை தொடர்பாக பொலிஸார் மன்னார் பகுதியில் வலைவிரித்துள்ளனர்.

பொலிஸ் கோஷ்டியினர் மன்னார் பகுதியில் சந்தேக நபர் ஒருவரைத் தேடிவருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. [க]

## பத்திரிகையாளர் குழு வடபகுதிக்கு இன்று விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்களை நேரில் கண்டறிவதற்கும், அரசியல் தலைவர்களையும், இளைஞர் இயக்கங்களையும், விவசாயிகள், கடற்றொழிலாளர்களைச் சந்திப்பதற்கும் பத்திரிகைக் குழுவொன்று இன்று நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகிறது

இப்பத்திரிகை நிருபர்களின் வடபகுதி விஜயத்தை யாழ். அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்னாண்டோ ஏற்பாடு செய்துள்ளார். தகவல் இலாகா இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது.

இன்று காலை கொழும்பிலிருந்து விசேட வாகனத்தில் புறப்படும் பத்திரிகையாளர் குழுவிற்கு மதவாச்சியில் நண்பகல் போசன விருந்தளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

முருகண்டியில் இன்று பிற்பகல் 2 மணிக்கு இப்பத்திரிகை நிருபர்கள் குழுவினரை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்னாண்டோ வரவேற்பார்.

பிற்பகல் 3 மணிக்கு குழுவினர், யாழ். அரசாங்க செயலகத்தை வந்தடைவார்கள் பிற்பகல் 3-30 மணிமுதல் 4-30 மணிவரை பத்திரிகை நிருபர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுவார்கள். பின் பத்திரிகை நிருபர்கள் அரசாங்க அதிபரின் விருந்தாளிகளாக அவரது வாசஸ்தலத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். அன்று அங்கு தங்கியிருப்பார்கள்.

இம்மாதம் 24ம் தேதி காலை 8 மணிக்கு யாழ் அரசாங்க செயலகத்தில் இளைஞர் இயக்கத்தினரையும் மாணவர் இயக்கத்தினரையும் சந்திப்பார்கள். காலை 9-30 மணிக்கு சமய வழிபாட்டு ஸ்தலங்களுக்கு விஜயம் செய்வார்கள்.

காலை 11 மணிக்கு கிரிமலைக்குச் செல்வார்கள் வழியில் சுன்னாகம், கந்தரோடை, மாவிட்டபுரம் ஆகிய இடங்களில் அப்பகுதி விவசாயிகளைச் சந்திப்பார்கள். பருத்தித்துறையில் நண்பகல் விருந்தளிக்கப்படும் அப்பகுதி கடற்றொழிலாளரைச் சந்திப்பர்

பிற்பகல் 2-30 மணிக்கு வல்லிபுரம், மணற்காடு ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்வார்கள். பிற்பகல் 4-30 மணிக்கு யாழ்ப்பாணத்திற்கு புறப்படுவார்கள். இரவு 7 மணிக்கு வடபகுதி பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திப்பார்கள். இச்சந்திப்பின் போது இரவுபோசன விருந்தளிக்கப்படும்.

இம்மாதம் 25ம் தேதி காலை 8-30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச்

[6-ம் பக்கம் பார்க்க]

# மருத்துவத்துறையில்இலங்கையர் சாதனை

# சிறுநீரக நோய்தீர்க்க புதியகருவி கண்டுபிடிப்பு

[புலோலி]

தம்முடைய அரிய சாதனை ஒன்றினுல் இலங்கைக்குச் சர்வதேசப் புகழையும் பெருமையையும் ஈட்டியுள்ளார் பம்பாயிலுள்ள இந்திய நுண்ணுராய்ச்சி நிலையத்தின் இரசாயன பொறியியல் பட்டதாரியான பரமகுரு இராதாகிருஷ்ணன். இவர் தமது ஆராய்ச்சியினுல்சிறுநீரக நோயாளிகளைக் குணப்படுத்துவதற்கு ஒருகருவியைக் கண்டுபிடித்திருக்கிறுர்.

சமீபத்தில் 'ரைமஸ் ஒப் இந்தியா' 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' உட்படப் பல பிரபல இந்தியப் பத்திரிகைகளுக்கு அளித்த பிரத்தியேகமான பேட்டி ஒன்றில் இராதாகிருஷ்ணனின் கண்டுபிடிப்பைப் பற்றிப் பேசிய பம்பாய் ஜி. எஸ். வைத்தியக் கல்லூரி மற்றும் 'கெம்'வைத்தியகூடம் ஆகியவற்றின் தலைவரான வைத்திய கலாநிதி வி கே. தேஷ்பாண்டே, இராதாகிருஷ்ணனுல் கண்டுபிடிக்கப்பட்ட இக்கருவி நாயின் மீது பரிசோதிக்கப்பட்டு வெற்றிகரமான விளைவைத் தந்துள்ளதென்றும் மிகவிரைவில் நோயாளி மனிதன் மீது பரிசோதிக்கப்படுமென்றும் கூறினுர்.

தமது படைப்பைப் பற்றிக் கூட்டத்தில் விளக்கிப் பேசிய இராதாகிருஷ்ணன் இந்த நுண் மின்விரிபகுப்பு என்னும் வழி, மனிதரில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்ட பின்னர், நோயாளி ஒருவரின் நிணநீர்ச் சுற்ரேட்டம் நடைபெறும் நெஞ்சறைக்கானுடன் மின்ஒட்டம் பொருத்தப்பட்ட மேலுறை இணைக்கப்படும் என்றுர். பரிசோதனையின்போது நிணநீரின் விரைவான உயிர்ப்புள்ள மின்விரிபகுப்பு மூலம் நாயின் குருதியிலுள்ள கழிவுப்பொருட்களின் செறிவைக் குறைக்க முடிந்தது.

நோயாளி தமது அன்ருட அலுவல்களை மேற்கூறிய மின்னேட்டம் பொருத்தப்பட்ட மேலுறையை அணிந்துகொண்டே கவனிக்கலாம். இதுகாலவரை நடைமுறையில் இருப்பதுபோன்று படுக்கையில் இருந்து கொண்டுதான் சிகிச்சைபெற வேண்டுமென்பதில்லை. மேலும் சிறுநீரக நோயாளிகளைக் குணப்படுத்துவதற்குத் தற்போது பாவனையில் இருந்துவரும் செயற்கைச் சிறுநீரக இயந்திரம் ஒரு சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்ட பெரிய அளவிலானது. இராதாகிருஷ்ணனுல் கண்டுபிடிக்கப்பட்ட 20 சதுர செண்டிமீட்டர் பரப்பளவை மட்டுமே கொண்ட புதிய கருவி முன்னைய இயந்திரத்தைச் செய்வதற்கு ஏற்படும் செலவைவிடப் பன்மடங்கு குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டது. இச்சருவி நோயுற்ற மனிதகுலத்துக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும்.

சமீபத்தில் நடந்த அகிலஇந்திய சிறுநீரக மருத்துவயாளர்களின் வருடாந்த மநாட்டில் இராதாகிருஷ்ணனுல் சமர்ப்பிக்கப்பட்ட அவருடைய கண்டுபிடிப்பு அமோகமான வரவேற்பையும் பாராட்டையும் பெற்றது. மொன்றியேலில் (கனடா) நடைபெறும் சர்வதேச சிறுநீரக மருத்துவ ஆராய்ச்சியாளரின் மாநாட்டில் இக்கருவி பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அங்கும் இராதாகிருஷ்ணனின் படைப்புக்கு மிகுந்த வரவேற்பும் பாராட்டும் கிடைத்துள்ளது.

இதே வேளையில் உலகின் பல்வேறு பாகங்களிலுமுள்ள பிரபல வைத்தியர்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் இராதாகிருஷ்ணனுக்குப் பாராட்டுக்களும் அவருடைய கருவிபற்றித் தகவல் கேட்டுக் கடிதங்களும் வந்து கொண்டேயிருக்கின்றன. இந்தக்கண்டுபிடிப்புத்தமது இலட்சியத்தின் முதற்படி என்று இராதாகிருஷ்ணன் கருதுகிருர்.

ராதா என்று உறவினர்களாலும் நண்பர்களாலும் அழைக்கப்படும் இராதாகிருஸ்ணனிடம் கல்லூரிக் காலத்திலேயே இப்படிப்பட்ட சாதனைகளைச் சாதிக்கக் கூடியவர் என்பதற்குரிய அம்சங்கள் காணப்பட்டன. அமைதியான இனிய சுபாவங் கொண்ட

[5ம் பக்கம் பார்க்க]


## வரி விளம்பரம்

### பயிற்சி

ஆங்கிலம் சிறந்த சுலபமான முறையில் திரு. வ. பொன்னம்பலம் M A. நடாத்துவார். உடன் தொடர்பு கொள்ளவும், NATIONAL INSTITUTES, 57, பாங் சோல் வீதி, யாழ்ப்பாணம். 1959

### வகுப்புகள்

ஜேர்மன் பாஷைக்கான ஆரம்ப வகுப்புகள் 2-4-79ல் ஆரம்பமாகின்றன. தொடர்பு கொள்க. சபாநாயகம், 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 1956


## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

புளியந்தீவு காலஞ்சென்ற செல்லையா தங்கரெத்தினத்தின் மரணசாதன மில்லாச் சொத்து விடயத்தில்

மட்டக்களப்பு பிள்ளையாரடி ஜெயலக்ஷ்மி கணபதிப்பிள்ளை. மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்
இல: 906/T. எதிராக

1. மட்டக்களப்பு பிள்ளையாரடி நாராயணமூர்த்தி ரவிச்சந்திரன் மோகனதாஸ்
2. —Do—முருகேசு கணபதிப்பிள்ளை.

உத்தரவாதிகள்

1978-ம் ஆண்டு ஆனி மாதம் 28ந் திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதவான் திரு. C. மனேகரா அவர்கள் முன்னிலையில் மனுதாரரின் சட்டத்தரணி L. K. செல்வநாயகம் அவர்கள் பிரசன்னமாயிருக்க மனுதாரரின் முறையே 29-5-78, 28-6-78ம் திகதிகளையுடைய சத்தியக் கடதாசியையும் மனுவையும் வாசித்தபின்னர்.

1979ம் ஆண்டு தை மாதம் 11-ந்திகதி அல்லது அதற்கு முன் உத்தரவாதிகளோ அல்லது வேறுயாரும் உரிமையுடையவர்களோ இதற்கு முரணுகப் போதிய நியாயம் காட்டாவிடில் மேற் சொல்லப்பட்ட சிற்றவையரான 1-ம் உத்தரவாதிக்கு 2ம் உத்தரவாதியை பாதுகாவலனுக நியமிக்கும்படி கட்டளையிடப்படுகிறது.

மேலும் 1979 ம் ஆண்டு தை மாதம் 11-ந் திகதி அல்லது அதற்கு முன் உத்தரவாதிகளோ அல்லது வேறு யாரும் உரிமை உடையவர்களோ இதற்குமாருகப் போதிய நியாயம்காட்டாவிடில் காலஞ்சென்றவரின்மருமகளாகையால் அவரின் ஆதனத்துக்கு நிர்வாகக் கடிதம் எடுப்பதற்கு மனுதார் உரித்துடையவர் என்று பிரகடனப்படுத்தும்படி கட்டளையிடப்படுகிறது.

(ஒப்பம்) C. மனேகரா
மாவட்டநீதிபதி

1978ம் ஆண்டு ஆனி மாதம் 28ந் திகதி.
11-1-79
29-3-1979 க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

(ஒப்பம்) F.G. B. பெரேரா
மாவட்டநீதிபதி.

1807

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் முதல் உப-வரவு செலவுத்திட்டம் 1979

1979-ம் வருடத்திற்குரிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் முதலாவது உப-வரவு செலவுத் திட்டம், 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ந் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) 214 (2) (பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

க. சிவஞானம்,
விசேட ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
19-3-79. 1968

## அறிவித்தல் சோலைவரி 1-ம் கந்தாயம் 1979

பண்டத்தரிப்புப் பட்டணப் பிரதேசத்திலுள்ள ஆதனங்களின் முதலாம் கந்தாய சோலைவரிக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு 30-04-79-ந் திகதி வரையும் கால நீடிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இத் திகதிக்குப் பின் 10 சத வீதம் வராந்துச் செலவுப் பணமும் சேர்த்து அறவிடப்படும்.

இவ்வாண்டிற்குரிய 2-ம், 3-ம், 4-ம் கந்தாய வரிப் பணங்களை முறையே 30-06-79, 30-09-79, 31-12-79 ஆகிய திகதிகளுக்கு முன்பு செலுத்தப்படல் வேண்டும். இக்கந்தாயங்களுக்கு காலநீடிப்பு கொடுக்கப்படமாட்டாது என்பதை அறியத் தருகின்றேன்.

மா. மயில்வாகனம்,
விசேட ஆணையாளர்,
பண்டத்தரிப்பு பட்டணசபை.

பட்டணசபை அலுவலகம்,
பண்டத்தரிப்பு,
19-3-79. 1951

## சாவகச்சேரி நகரசபை மாட்டிறைச்சிக் கடைக்கான கேள்வி அறிவித்தல்

10-4-79 முதல் 31-12-79 வரையிலான காலப்பகுதியில் கீழ்க்குறிப்பிடப்படும் இறைச்சிக் கடையில் வியாபாரம் நடாத்தும் குத்தகை உரிமைக்கான முத்திரையிடப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளாக 6-4-79 மு. ப. 10-00 மணிவரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

### அட்டவணை

| வியாபாரம் | கடை இல. | 1979 ம் ஆண்டு ஏற்றுக் கொண்ட தொகை | கேள்விவைப்பு பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| மாட்டிறைச்சிக்கடை சந்தை, சாவகச்சேரி | எல். கியூ. 1 | ரூ. 9000/- | ரூ. 150/- | ரூ. 15/- |

மேற்படி வைப்புப் பணமும் கேள்விப்படிவக் கட்டணமும் செலுத்தப்படுவதன் பேரில் 5-4-79 நண்பகல் 12-30 மணிவரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணம் திருப்பித்தரப்பட மாட்டா. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கையில் கைசாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் திருப்பித்தரப்படும். கேள்வி வைப்புப் பணமும் படிவக்கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

முறைப்படி கேள்விப்படுத்தப்பட்ட கேள்விகள் இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம். அல்லது பதிவுக்கடிதமூலம் அனுப்பப்படலாம். அனுப்பப்படும் கடித உறையின் இடது மேல்மூலையில் "மாட்டிறைச்சிக்கடை இல. எல். கியூ. 1 க்கான கேள்வி" என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். எந்தவொரு காரணமும் காட்டாது கேள்விகள் அனைத்தையுமோ எவற்றையேனுமோ ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளருக்குண்டு. 1979 ம் ஆண்டிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகைக்கு குறைந்த கேள்விகள் பரிசீலனை செய்யப்படமாட்டாது.

மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

த. நவரத்தினராசா,
விசேட ஆணையாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 21-3-79. 1972


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

நிகழும் காலயுத்தி ஆண்டு பங்குனித்திங்கள் 10-ம் நாள் (24-3-79) சனிக்கிழமை இரவு 6-00 மணி தொடக்கம் 7-30 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்,

எங்கள் புதல்வன்
திருநிறை செல்வன்
**யோகமூர்த்தி**
அவர்களுக்கும்
(Burah. Hathy & Co.- Chartered Accountants)

எங்கள் புதல்வி
திருநிறை செல்வி
**சாந்தகுமாரி**
அவர்களுக்கும்
(Commercial Bank of Ceylon Limited)

திருவருள் நலத்தினுல் மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திலும், மணமகன் இல்லத்தில் 25-3-79 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நடைபெற இருக்கும் வரவேற்பு உபசாரத்திலும் நண்பர்களையும், உறவினர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்

திரு, திருமதி பூ. வ. கந்தையா
(பங்காளர், செ. ஆ. செல்லையா அன் கொம்பனி, கொழும்பு — யாழ்ப்பாணம்)
கரும்பசிட்டி, தெல்லிப்பளை

திரு, திருமதி கே. ஆழ்வாப்பிள்ளை
(இலங்கை விமானச் சேவை, கட்டுநாயக்கா)
"பணி மகால்"
நெல்லியடி, கரவெட்டி.

971

## கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்,

மூளாய், சுழிபுரம்.

மேற்படி வைத்தியசாலை அங்கத்தவர்கள் விலாச மாற்றங்கள் இருந்தால், தயவுசெய்து அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேம்.

தலைவர்.

1970

## மக்கள் கருத்து

### பூநாறி வீதியின் நிலை

காங்கேசன்துறை வீதியில் இருந்து மேற்குப்பக்கமாக நோக்கி மணியங்காடுவரையும் உள்ள பூநாறி வீதி கடந்த பலவருடங்களாகக் கவனிப்பாரற்றுக்கிடக்கின்றது. இவ்வீதியைப் பற்றிப் பலதடவைகள் கொக்குவில் கிராம சபைக்கு அறிவித்தும் இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை. இவ்வீதியில் மணியங்காட்டுக்கு அண்மையில் உள்ள இடத்தில் பள்ளமான இடங்களுக்கு எங்களில் சிலர் சிரமதானமூலம் கிறவல் மக்கி போட்டு கிடங்குகளான இடங்களை நிரப்பினோம்.

மேற்படி வீதி ஒருபக்கம் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கும் மறுபக்கம் கொக்குவில் கிராம சபைக்கும் சேர்ந்தது, இதனால் இந்த வீதி இருபகுதியினராலும் கவனிக்கப்படாமல் இருப்பதால் இவ்வீதியில் வசிப்பவர்கள் மிகுந்த போக்குவரத்துக் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

இவ்வீதியில் பலஇடங்களில் போக்குவரத்துக்கு உதவாத முறையில் கிடங்குகள் நிறைந்தும், தார் இல்லாது பள்ளமும் திட்டியுமாகக் காட்சியளிப்பது கவலைக்குரிய விஷயம். மாரி காலங்களில் இக்கிடங்குகளில் நீர் முட்டித்தேங்கி நிற்பதால் சைக்கிளில் செல்பவர்களும் நடந்துசெல்லும் பொது மக்களும் இப்பாதையை அறியாமல் கிடங்குகளில் விழுந்து உடல் முழுவதும் வெள்ளமும் சேறுமாகச் செல்லவேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

இவ்வீதியில் உள்ள மின்சாரக் கம்பங்களில் இருக்கும் மின்சார விளக்குகளில் வெளிச்சம் போதாமையினாலும், பொதுமக்கள இரவு நேரங்களில் செல்லும்போது சிரமம் அடைகின்றனர்.

பூநாறி வீதியை கொக்குவில் கிராம சபையும், யாழ் மாநகரசபையும் இரண்டுமாகச் சேர்ந்து செப்பனிட்டு ஒளி பெறச் செய்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

திருமதி ஜி. கனகலிங்கம்
பூநாறி வீதி,
கொக்குவில்

ஃ ஃ ஃ

### சமூகக் குறைபாடுகள்

22-3-79 'ஈழநாடு' மக்கள் கருத்துப் பகுதியில் யாழ்ப்பாணம் ஸ்ரேசன் வீதியைச் சேர்ந்த கு. இராஜையா என்பவர் எழுதியிருந்த 'வீதிக்கும் சாதிப் பெயர்தானு' என்ற கருத்தைப் பார்த்து மிகவும் வெட்கமும் வேதனையும் அடைந்தேன். சமூகக் குறைபாடுகள் இன்னமும் ஒழிந்தபாடில்லை என்பதை ஏற்றுக்கொண்டு ஒரு முக்கியமமன விடயத்தை அறியத்தருகிறேன்.

மாநகர ஆணையாளர் கண்டிப்பானவர்; நேர்மையானவர்; ஒரு சோஷலிசவாதி. சம்பவம் நடைபெற்றதினம் மின் பொறியியலாளரிடமோ அன்றி நேரடியாக ஆணையாளரிடமோ முறைப்பாடு செய்திருந்தால், அப்படி விஷயம் உண்மையானதுதான் என்று அறிவாராயின் குறிப்பிட்ட ஊழியர் கடுமையான தண்டனைக்கு ஆளாகியிருப்பார். மேலும்சாதிப்பெயர் கொண்ட வீதிகள் அத்தனையும் ஏற்கனவே அகற்றப்பட்டுள்ளன. எவரோ ஒருவர் செய்யும் தவறுக்காக முழுசமுதாயத்தின் மீதும் குற்றம் சுமத்துவது சரியல்ல.

ச. வே. சின்னத்தம்பி,
கண்ணபுரம்,
யாழ்ப்பாணம்.

# இன்று ஆரம்பமாகும் சென்றல் - சென்ஜோன்ஸ் 81-வது கிரிக்கட் மோதல்



எல்.ஆர்.சோமசுந்தரம்
கப்டன்

### பரியோவான் கல்லூரி கோஷ்டி

என். ஆர். சோமசுந்தரம்: (காப்டன்) கிரிக்கெட் விருதுபெற்ற 3ம் வருட வலதுகை துடுப்படி வீரர். அதிவேகப்பந்து வீச்சாளர்.

ஈ. ஜே. ஜெபரட்ணம்: (உதவிக்காப்டன்) 3ம் வருட விருதுபெற்ற, ஆரம்பவேகப் பந்து வீச்சாளர் இவ்வருடம் பல விக்கட்டுகளைக் கைப்பற்றி பெருமைபெற்றவர். இடதுகைத் துடுப்பாட்ட வீரர்.

என். வசந்தன்: 3ம் வருட வலதுகைத்துடுப்பாட்ட வீரர். வலதுகைச் சுருள் பந்து வீச்சாளர்.

டி. எம். இரத்தினராஜா: 2ம் வருட விருது பெற்றவர். இடதுகைத்துடுப்பாட்டக்காரர். மிகவேகப் பந்து வீச்சாளர்.

எஸ். கருண குமார்: 2ம் வருட வலதுகைச் சுருள் பந்து வீச்சாளர். நன்றாகப் பந்து பிடிக்க வல்லவர்.

ஈ. ரி. தஞ்சரட்னம்: 2ம் வருட வலதுகைத் துடுப்பாட்ட வீரர். பதில் விக்கெட் காப்பாளர்.

கே. சி. சத்தியகுமார்: விக்கெட் காப்பாளர் வலதுகை துடுப்பாட்ட வீரர்.

எஸ். தனஞ்சயன்: 1ம் வருட அதிவேக ஆரம்பபந்து வீச்சாளர்.

ரி. சிறிநந்தகுமார்: 1ம் வருட இடது கைச்சுருள்பந்து வீச்சாளர். வலதுகை துடுப்பாட்ட வீரர்.

எம். டீ. இரவீந்திரா: 1ம் வருட ஆரம்ப வலதுகைத் துடுப்படி வீரர்.

எம். அன்புச்செல்வன்: 1ம் வருட அதிவேக பந்து வீச்சாளர் இடதுகை துடுப்படி வீரர்.

வி. கதிர்காமநாதன்: 1ம் வருடம் வலது கை துடுப்பாட்டவீரர். வலதுகைச்சுருள் பந்து வீச்சாளர்.

ஜே. ஜே. புவீந்திரன்: 1ம் வருட எந்தப்பகுதியிலும் சிறப்பாகப்பந்து பிடிக்கும் ஆற்றலுடையவர். வலது கைச்சுருள் பந்து வீச்சாளர்.

ஆர். அஞ்சலன்: 1ம்வருட வலது கைவேகப் பந்து வீச்சாளர் சிறந்த பந்து பிடிப்பாளர்.

ஆர். சிவகுருநாதன்: 1ம் வருட சுமாரான பந்து பிடிப்பாளர் வலது கை மித வேகப்பந்து வீச்சாளர்.

(அரியா-திரு)

(யாழ்ப்பாணம்)

வட இலங்கையின் பிரபல கல்லூரிகளான யாழ். மத்திய கல்லூரிக்கும், யாழ். பரியோவான் கல்லூரிக்குமிடையேயான 81-வது வருடாந்த கிரிக்கெட் போட்டி இன்றும் நாளையும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது.

மத்திய கல்லூரிக் கோஷ்டிக்கு செல்வன் எஸ். கருணாகரனும், பரியோவான் கல்லூரிக் கோஷ்டிக்கு செல்வன் என். ஆர். சோமசுந்தரமும் தலைமைதாங்குகிறார்கள்.

ஆட்டம் இருநாட்களும் காலை 10-15 மணி முதல் மாலை 5-30 மணிவரை நடைபெறும்.

இரு கல்லூரிகளுக்குமிடையே கடந்த ஆண்டு இடம்பெற்ற 80-வது வருடாந்தப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது தெரிந்ததே.

#### சென். ஜோன்ஸ்-30 சென்றல்-21

இதுவரை நடைபெற்ற 72 போட்டிகளில் பரி.யோவான் கல்லூரி 30 போட்டிகளிலும் மத்திய கல்லூரி 21 போட்டிகளிலும் வெற்றி பெற்றன. 21 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன

1970-ம் வருடம் நடைபெற்ற போட்டியில் யாழ். மத்திய கல்லூரி வெற்றியீட்டியது. அதன்பின்னர் இதுவரை நடைபெற்ற போட்டிகள் வெற்றி-தோல்வியின்றியே முடிவடைந்தன.

#### பரியோவான் கல்லூரி

யாழ். பரியோவான் கல்லூரி இவ்வாண்டு ஐந்து கல்லூரிகளுடன் போட்டியிட்டது. சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியுடனும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியுடனும் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியது. பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி யாழ். இந்துக் கல்லூரி ஆகியவைகளுடன் நடைபெற்ற போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

#### 'செஞ்சரி' வீரர்கள்

மகாஜனக் கல்லூரியை எதிர்த்து நடைபெற்ற போட்டியில் செல்வன் டி. எம். இரத்தினராசா 133 ஓட்டங்களையும் செல்வன் எஸ். கருணகுமார் ஸ்கந்தவரோதயாவுடன் நடைபெற்ற போட்டியில் ஆட்டமிழக்காது 115 ஓட்டங்களையும் பெற்றனர்.

செல்வன் என். வசந்தன் மகாஜனக் கல்லூரியுடன் நடைபெற்ற போட்டியில் 127 ஓட்டங்களையும், ஹாட்லிக் கல்லூரியுடன் நடைபெற்ற போட்டியில் 124 ஓட்டங்களையும் பெற்றார்.

பரியோவான் கல்லூரிக் கோஷ்டிக் காப்டன் செல்வன் என். ஆர். சோமசுந்தரம் கடந்த ஆண்டு மகாஜனக் கல்லூரியுடனான போட்டியில் ஆட்டமிழக்காது 102 ஓட்டங்களையும் ஹாட்லிக் கல்லூரியுடனான போட்டியில் 100 ஓட்டங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. 1978-ம் ஆண்டு மத்திய கல்லூரியுடன் நடைபெற்ற 80-வது வருடாந்தக் கிரிக்கெட் போட்டியில் செல்வன் டி. எம். இரத்தினராசா 102 ஓட்டங்களைப் பெற்று சிறந்த துடுப்படி வீரருக்கான பரிசைத் தட்டிக் கொண்டதும் தெரிந்ததே.

#### மத்திய கல்லூரி

யாழ். மத்திய கல்லூரி இவ்வருடம் 7 கல்லூரிகளுக்கு எதிராக ஆடிய போதிலும் குருநாகல் மாலிக தேவ கல்லூரியை மட்டுமே 8 விக்கெட்டுகளால் மட்டுமே வெற்றியீட்டியது.

#### 'செஞ்சரி' வீரர்கள்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு எதிரான ஆட்டத்தில் ரே. தோமஸ் ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களையும் ஹார்ட்லிக் கல்லூரிக்கு எதிரான ஆட்டத்தில் எஸ். பி. பிரேமச்சந்திரன் 126 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். (அரி-இ)



எஸ். கருணாகரன்
கப்டன்

### மத்தியகல்லூரி கோஷ்டி

எஸ். எஸ். கருணாகரன் (காப்டன்) 3-ம் ஆண்டு இடதுகை துடுப்பாட்ட வீரர். வலதுகைசுருள்பந்துவீச்சாளர்.

ஜீ. நித்தியானந்தன் 3-ம் ஆண்டு. முன்னணித் துடுப்பாட்ட வீரர். உதவி விக்கட் காப்பாளர். தரமான பந்து வீச்சாளர்.

ஜீ. அநுருத்திரன் 3-ம் ஆண்டு ஆரம்பத்துடுப்பாட்டவீரர். சிறந்த விக்கட் காப்பாளர்.

எஸ். பி. பிரேமச்சந்திரன் 3-ம் ஆண்டு வேகப் பந்து வீச்சாளர். வன்மையாகவும் விரைவாகவும் ஓட்டங்கள் பெறும் கவர்ச்சிமிக்க துடுப்பாட்ட வீரர்.

ரீ. ஸ்ரீஸ்கந்தராஜா 2ம் ஆண்டு ஆரம்ப வலதுகை வேகப்பந்து வீச்சாளர். நம்பிக்கையூட்டும் துடுப்பாட்ட வீரர்.

பீ. உதயகுமார் 2-ம் ஆண்டு ஆரம்ப துடுப்படிவீரர். கவர்ச்சியாகப் பந்தடிப்பவர். பந்து காப்பதில் வல்லவர்.

கே. தோமஸ் 2ம் ஆண்டு துரிதமாக ஓட்டம் சேர்க்கும் சிறந்த துடுப்பாட்ட வீரர். வலக்கை சுருள்பந்து வீசுபவர்.

ஆர். பாலக்குமார் 2-ம் ஆண்டு புத்திசாதுரியமாகப் பந்து வீசுவதில் வல்லவர். இவ்வாண்டில் பல விக்கெட்டுகளை வீழ்த்திய பெருமைக்குரியவர்.

ஜே. ஆர். ராஜ்குமார் 2-ம் ஆண்டு தரமான பந்து வீச்சாளர். துடுப்பாட்டத்திலும் வல்லவர்.

எஸ். ஸ்ரீரங்கன் அணிக்குப் புதியவர். இடதுகை பந்து வீச்சாளர். தரமான துடுப்பாட்டவீரர்.

வீ. பீ. பிரகலாதன் அணிக்குப் புதியவர். துடுப்பாட்டதிலும் பந்து வீச்சிலும் வல்லவர் திடலின் எப்புறத்திலும் பந்து காப்பதில் பெயர் பெற்றவர். அணியில் இளையவர்.

வை. ஜெயச்சந்திரன் அணிக்குப் புதியவர். வலிமையான துடுப்பாட்ட வீரர். நல்ல பந்துகாப்பாளர்.

வீ. ஜெயதீசன் தரமான துடுப்பாட்டவீரர். நல்லபந்து வீச்சாளர்.

பீ. ஷ்யாமளன் ஆரம்பத் துடுப்படிவீரர் தரமான வலக்புறச் சுருள் பந்து வீச்சாளர்.

### தவக்கால நற்சிந்தனை

"பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான். தன் கிரியை, கண்டிக்கப்படாதபடிக்கு ஒளியிடத்தில் வராதிருக்கிறான்.
(யோவான் 3-20)

எவனொருவன் ஆண்டவருடைய வேதவாக்கை மதியாமலும், அதன்வழி நடவாமலும், தன் இச்சையின் வழி நடக்க விரும்புகிறானே, அவன் அதன் பலனாய் உலகப் பாவங்களை எல்லாம் சுமந்து பலராலும் கெட்டவன் என்று தூற்றப்படுவான். அப்படிப்பட்டவர்கள் ஒளியின்அருட்சுடரை, அடையமுடியாதவர்கள். மற்றவர்கள் பாக்கியவான்கள். ஆகவே அந்தப்பேரின்பச் சுடரொளியை தாம் அடைய வேண்டாமா? அதன் பொருட்டு அல்லும் பகலும் ஆண்டவரின் திருப்பாதத்தின் கீழ் நின்று கண்ணீர் சிந்த வேண்டாமா?

—ஞானஒளி

தொகுப்பு : வில்பிறெட்

### மீனவர்சங்கக் கூட்டம்

(சித்தன்கேணி)

பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 28-ம் திகதி திரு. மா. மகாதேவன் தலைமையில் நடைபெற இருக்கின்றது.

### கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதிவு மேற்கு பிட்டியம்பதி ஸ்ரீ காளிகாபரமேஸ்வரி அம்பாள் கோவில் மகா கும்பாபிஷேகவிழா அடுத்த மாதம் 29-ம் திகதி நடைபெறவுள்ளது. [கு-அ]

# இஸ்ரேல் எகிப்து உத்தேச ஒப்பந்தம்; பாராளுமன்றகுழு அங்கீகாரம்

கெய்ரோ, மார்ச் 22. எகிப்து-இஸ்ரேல் உத்தேச ஒப்பந்தத்தை எகிப்திய ஆளும் ஜனநாயகக்கட்சிப் பாராளுமன்றக் குழு அங்கீகரித்தது.

80 விதமான எம். பி.க்கள் உத்தே ஒப்பந்தத்துக்கு ஆதரவு அளித்தனர்.

பாராளுமன்றக் குழுக் கூட்டத்திற்குப் பின்னர் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது!

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்கு இஸ்ரேலியப் படைகள் திரும்பிச் செல்லும் என்று எகிப்திய எம். பி.க்கள் நம்புகின்றனர்.

சைனாய் பிரதேசத்தில் உள்ள எண்ணெய் வளங்களையும் கனிப் பொருட்களையும் இஸ்ரேல் எகிப்திடம் திருப்பிக் கையளிக்கும் என்று எகிப்து நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அக்குழுவினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

எதிர்காலத்திலும் இஸ்ரேல்-எகிப்து ஒப்பந்த விஷயத்தில் அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் முழுமையான பங்கை அளிக்க வேண்டும் என்றும் இக்குழு கேட்டுள்ளது. (இ)

# ஜெயப்பிரகாஷர் மேலும் வாழகடவுள் இரங்கவேண்டும்

## ஜனாதிபதி ரெட்டி ஆசை

புதுடில்லி, மார்ச் 22 இந்தியாவின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவரான திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் எமது மத்தியில் மேலும் சில காலம் வாழ கடவுள் இரங்க வேண்டும்

இவ்வாறு இந்திய ஜனாதிபதி திரு நீலம் சஞ்சீவரெட்டி தெரிவித்துள்ளார்.

'தலைசிறந்த ஞானி ஒருவர் ஏன் இவ்வளவு கஷ்டப்பட வேண்டும். அவர் தொடர்ந்தும் உயிர் வாழ்ந்து இந்தியாவுக்குநல்வழிகாட்ட வேண்டும்' என்றும் அவர் கூறினார். (இ)

# ரங்காவின் 'நர்த்தனக் கோலம்' நாளை



இலங்கை அவைக்காற்றுகலைக் கழகம் தனது ரசிகர் அவைக்காக அளித்துவரும் மாதாந்த நிகழ்ச்சித் தொடர் வரிசையில் நாலாவதாக 'நாட்டிய விஷாரத' ரங்காவிவேகானந்தனின் 'நர்த்தனக் கோலம்' நாளை சனிக்கிழமை மாலை யாழ், வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறும்.

★

# 28-ம் திகதிக்குமுன்சீனப் படைவெளியேற வேண்டும்

## ஹனோய் வானொலி அறிவிப்பு

ஹனோய், மார்ச். 22 சீனப்படைகள் இம்மாதம் 28ம் திகதிக்கு முன் வியட்நாமிலிருந்து வெளியேற வேண்டும் என்று வியட்நாம் அறிவித்துள்ளது.

சீனப்படைகள் வெளியேறிய பின்னரே துணைவெளியுறவு அமைச்சர்கள் ரீதியில் இரு நாடுகளுக்குமிடையே பேச்சு வார்த்தை நடைபெறுமென்றும் ஹனோய் வானொலி அறிவித்துள்ளது

இதேவேளையில் வியட்நாமிலிருந்து சீனப்படைகள் வெளியேறுகையில் அப்படையினர் மீது வியட்நாம் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனரென்று சீன குற்றஞ்சாட்டியுள்ளது. (இ)

# இன் ஒதுக்கலுக்கு எதிரான ஆபிரிக்கமக்களின் போருக்கு இந்தியா ஆதரவு

## வாஜ்பாய் கூற்று

புதுடில்லி, மார்ச். 22 இன ஒதுக்கலுக்கு எதிரான ஆபிரிக்க மக்களின் போராட்டத்திற்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும்.

இவ்வாறு இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

சர்வதேச இன ஒதுக்கல் ஆண்டை ஒட்டி நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இன ஒதுக்கலுக்கு எதிராக ஆபிரிக்க மக்கள் மட்டுமே போராடவில்லை என்பதை ஆபிரிக்க மக்கள் உணர வேண்டும் என்றும் திரு வாஜ்பாய் கூறினார்.

ஆபிரிக்காவில் வெளிநாட்டினரின் ஆதிக்கம் ஒழியும் வரை இந்தியா ஓயாது என்றும் அவர் கூறினார். (இ)

# "உலமாக்கள் இயக்க ரீதியாக இயங்கவேண்டும்"

[கொக்குவில்]

"முஸ்லிம்சமூகத்தில் மார்க்கத்துக்கு முரணான செயற்கள் இடம் பெறுவதற்கு, உலமாக்களின் இயக்கமின்மையே காரணமாகும். முஸ்லிம்கள் மத்தியில் "ஸரீஅத்" பிரச்னைகள் ஏற்படும்போது, அதனைத் தீர்த்துவைக்க உலமாசபையின் இயக்கம் அவசியமாகும். முஸ்லிம்கள், மார்க்கப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண உலமாக்களை நாடுவது இயல்பாகும். உலமாக்கள் இயக்க ரீதியாக செயல்பட்டால் முஸ்லிம்கள் தமது மார்க்கப் பிரச்னைகளை இலகுவில் தீர்த்துக்கொள்ள முடியும்".

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட உலமாசபைக் கூட்டத்துக்கு தலைமை வகித்து உரையாற்றிய அகில கதீப்மார்சங்கத்தலைவர் மௌலவி கே. எம் எச். காலிதீன் குறிப்பிட்டார்.

மௌலவி எம் எஸ் புஹாரி கிராஅத்துடன் ஆரம்பமான இக்கூட்டத்தில், தொடர்ந்து உரையாற்றிய மௌலவி காலிதீன் இஸ்லாத்தின் மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வழி அமைத்துக் கொடுக்கும் பொறுப்பு உலமாக்களுக்குரியது. இதனை உலமாக்கள் ஒழுங்காக நிறைவேற்றினால் சமூகத்தில் பிரச்னைகளும் அனுச்சாரப் பழக்கங்களும் மறைந்துவிடும் எனக்குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் மௌலவி ஓ. எம். அப்துல் ரஸ்ஸாக், மௌலவி எம். ஐ. எம். ஹனிபா, மௌலவி ஏ. ஸி. ரஹ்மத்தில்லாஹ், காழி ஜனாப் எம். எம். எஸ் அப்துல் காதர் ஆகியோரும் உரையாற்றினர்.

# கட்டிடத் திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் விவேகானந்தா படிப்பகம், சனசமூக நிலையத் புதிய கட்டிடத் திறப்புவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது

திரு. மு. சு. சுந்தரம் தலைமையில் இடம்பெறும் இத் திறப்புவிழாவிற்கு பிரதம விருந்தினராக நல்லூர் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு. மு. சிவசிதம்பரம் கலந்துகொள்வார்.

திரு சிவசிதம்பரமும், சாவகச்சேரி எம். பி திரு. வி. என் நவரத்தினமும் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைக்க, புதிய கட்டிடத்தை மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா திறந்துவைப்பார்

யாழ் எம் பி. திரு வெ. யோகேஸ்வரன், எஸ். ரி. ஆர், பிலிப்ஸ் அதிபர் திரு. எஸ். தியாகராசா, சட்டத்தரணி திரு சி நாகராசா, நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு கே சபாபதிப்பிள்ளை ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள்,

கலைநிகழ்ச்சிகளும், மெல்லிசைக்கச்சேரியும் இடம்பெறும். [க. இ]

# மண்டலாபிஷேக நிறைவு

[ஊரெழு]

ஊரெழு ஸ்ரீ கண்ணகை மீனாட்சி அம்மன் கோவிலில் கடந்த மாசி மாதம் நடைபெற்ற புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேக வைபவத்தைத் தொடர்ந்து தினந்தோறும் நடைபெற்று வந்த மண்டலாபிஷேகம் கடந்த 17-ந் திகதி சனிக்கிழமையுடன் நிறைவு பெற்றது அன்றைய இறுதிநாள் அபிஷேக தினத்தன்று விசேஷ சங்காபிஷேகமும் நவசக்தி அர்ச்சனையும் திருவூஞ்சலும் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

கடந்த 19-ந் திகதி திங்கட்கிழமை மேற்படி கோவிலில் திருக்குளிர்த்தியும் அம்பாள் நகர உலாவும் நடைபெற்றன. (இ)

# வல்வை நகரசபை தேர்தலில் கூட்டணி

(தெல்லியடி)

அண்மையில் நடைபெறவுள்ள வல்வெட்டித்துறை நகரசபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடத்தின் தீர்மானத்திற்கமைய வேட்பாளர்கள் நிறுத்தப்படுவார்கள் என்று உடுப்பிட்டி எம். பி.யும், தொகுதி மாவட்டக் குழுவின் தலைவருமான திரு. த. இராசலிங்கம் தெரிவித்தார்

கட்சித் தலைமையின் நெறியுறுத்தலுக்குட்பட்டு அவ்வப் பகுதி மக்கள் குழுக்களின் ஆலோசனையின்பின்னர் தீர்க்கமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட பின் வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்படுவார்களென்றும், ஆனால் இதுவரை இந்நகரசபைத் தேர்தல் சம்பந்தமாகத் தொகுதி மாவட்டக்குழு எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென்றும் திரு. இராசலிங்கம் தெரிவித்திருந்தார். (க)



நாகம்ஸ்
[சுன்னுகம்]
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - சாவித்திரி
மனிதன்
மாறவில்லை

RIO (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
ANIMAL
(Full length Comedy)
Family Entertainment

## 15 இ. போ. ச, சாரதிகள் இடைநிறுத்தம்

[கொழும்பு]

குடிபோதையில் 15 பஸ் சாரதிகளை மத்திய போக்குவரத்துச் சபை இடைநிறுத்தி வைத்துள்ளது.

போக்குவரத்து அமைச்சின் புதிய திட்டத்திற்கமைய திடீர் பரிசோதனைக் குழுவினரின் பரிசோதனையின்போதே இவர்கள் அகப்பட்டனர்.

இதே நடவடிக்கையைப்பின் பற்றுமாறு பிராந்திய போக்குவரத்துச்சபைகளையும் மத்திய போக்குவரத்துச்சபை கேட்டுள்ளது. [இ]

12-வது வாரம்
வின்ஸர்
[யாழ்ப்பாணம்]
போன்: 488
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

தினசரி 4 காட்சிகள்
ராணி
[யாழ். நகர்]
சிவாஜி - பத்மினி
டி. ஆர். மகாலிங்கம்
ஸ்ரீ வள்ளி
(புதிய பிரதி—கலர்)

REGAL
(Jaffna)
3rd CROWDED WEEK
Daily 4 Shows
2-00, 4-30,
7-00 & 9-30 p.m. only
JEAN PAUL - BELMONDO in
THE HUNTER (color)
(Spy film)
த ஹன்ரர்

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி: 3-30, 6-30&9-45
சனி, ஞாயிறு: 10-30, 3-30
6-30 & 9-45
ஜெமினி — சாவித்திரி
கடன்வாங்கிக் கல்யாணம்
[புதிய பிரதி]

லிடோ
போன்: 7638
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
[யாழ்.நகர்]
ஆசை அறுபதுநாள்

சாந்தி
போன்: 7642
யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
விநோத் கன்னு... கபீர் பெடாய்...
"குச்சே டாஹ்" -ஹிந்தி
KUCHCHE DAAGE—HINDI
IN EASTMAN COLQR
ROBBERY, SUSPENSE, THRILL AND
—FULL OF ACTION PACKED FILM—
Music: LAXMIKHANT - PYARALAL
இந்தியாவில் சாம்பல் பள்ளத்தாக்கில் நடந்த பயங்கரக் கொள்ளைக் கோஷ்டியின் கதை.
24-3-79 — 10-30 மட்டும் நிதியுதவிக்காட்சி
"நவராத்திரி"

ஸ்ரீதர்
(யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-30&9-45
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
பாக்தாத் பேரழகி
(கலர்) (புதிய பிரதி)

மனோகரா
[யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-சாவித்திரி
ஹலோ மிஸ்டர் ஜெமின்தார்
[புதிய பிரதி]

## இன்றைய பலன்

பங்குனிமாதம் 9-ம் திகதி

(23-3-1979)

வெள்ளிக்கிழமை

**மேடம்:** கொள்வனவுகளில் நல்ல திருப்பம் ஏற்படும், வாகனசுகத்துடன் வாழ்க்கை நலனும் வந்துசேரும், தாய் வழித்தனத்துடன் தன்மானம் தலைதூக்கும்.

**இடபம்:** சமூகத்தில் அந்தஸ்து உயருவதற்கிடமுண்டு, பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையைத்தரும், ஆராய்ச்சியிலும் ஆர்வம் பிறக்கும்.

**மிதுனம்:** ஏமாந்த நேரத்தில் உங்களை வீழ்த்தி விடுவதற்கு சிலர் முனைவர், துயரத்தில் ஆழ்த்தும் செய்தியொன்றும்கிடைக்கும், விழிப்புணர்ச்சியுடன் இருக்கவும்.

**கடகம்:** கண்ணியமான காரியங்களை முடிப்பதில் வெற்றி காண்பீர்கள், எதிர்ப்புகள் மறையும், களஸ்திரவழியிலும் சுகம் கிடைக்கும்.

**சிங்கம்:** பணத்தைக் கொடுத்து பகையைச் சம்பாதிப்பீர்கள், தொழில் துறையிலும் சோர்வு தென்படலாம், ஆயுதபீடைக் கிடமுண்டு கவனம் செலுத்தவும்.

**கன்னி:** நீண்டநாள்தடை இன்று விலகக்கூடும், இனபந்துக்கள் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு, தருமகாரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**துலாம்:** வியாபாரத்துறையின் மூலம் வெளிநாட்டுத் தொடர்புபெருகும், இருப்பிடமாற்றமும் ஏற்படும், குடும்பத்திலும் மகிழ்ச்சியுண்டு.

**விருச்சிகம்:** இரக்கசிந்தை மேலிடும், பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருள் வளத்தில் புதுப் பொலிவு காணும்.

**தனுசு:** சிறிய காரியத்தை முடிப்பதற்கும் அதிக பணத்தைச் செலவு செய்வீர்கள், உறங்கிக்கிடந்தபகை மீண்டும் தலைதூக்கும், சிலர் கடன்படவும் நேரிடும்.

**மகரம்:** துஷ்டர்கள் உறவால் துயரத்தில் மூழ்குவீர்கள், வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமேற்படும், திடீர் முடிவைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** எழுத்தாளர்களுக்கு எழுச்சி மிக்க தினம், சிலர் வாழ்க்கையில்சன்மானம் கிடைப்பதற்கும் இடமுண்டு. குடும்பத்திலும் மகிழ்ச்சியுண்டு.

**மீனம்:** சிந்தனை அலைகள் சிறிப்பாயும், மூத்தசகோதரத்தின் உடல்நிலை பாதிக்கப்படலாம், பொறுமையுடன் இருக்கவும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்-பத்மபிரியா
உறவு சொல்ல
ஒருவன்

ராஜா
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா
நடித்த
எதிரொலி
[புதிய பிரதி]

## அமரர் ஜி. ஜி.ஞாபகார்த்த பேச்சுப்போட்டி

(சரவணை)

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் இரண்டாம் வருட சிரார்த்ததின ஞாபகார்த்தப் போட்டி புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 25-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

புங்குடுதீவு மாணவர்களுக்கான இப்போட்டியை புங்குடுதீவு அபிவிருத்தி சமூக சேவா சங்கம் நடத்துகிறது மாலை நடைபெறும் பரிசளிப்பு விழாவுக்கு வடமாநில கல்வி அதிகாரி திரு. ஏ.எஸ். நல்லையா தலைமை தாங்குவார். பிரதம அதிதியாக வடமாநில கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் கலந்து கொள்வார்.

பேச்சுப் போட்டியில் வெற்றி பெறுவோருக்கு தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்க சேவா சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர்.

## கடல்அட்டைஏற்றுமதிமூலம் நாலரை லட்சம் ரூபா!

[சித்தன்கேணி]

பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவுச் சங்கம் கடல் அட்டையை சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்து, 4 லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா அந்நியச் செலவாணியை சம்பாதித்துள்ளது.

இப்பணத்தில் 45,000 ரூபாவை கடற்தொழில் அதிபரின் பணிப்புரையின்பேரில் வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அங்கத்தவர்களின் சேமிப்புக்காக ஒதுக்கி வைத்துள்ளது.

தற்போதும் பெருமளவு கடல் அட்டையை சிங்கப்பூக்கு ஏற்றுமதி செய்யும் பணியில் மேற்படி சங்கம் ஈடுபட்டுள்ளது.

## இந்த எழுதுவினைஞர்கள் வேலை இழப்பர்!

[கொழும்பு]

இவ்வருடம் ஜனவரியில் இடமாற்றம் செய்யப்பட்டு இதுவரை புதிய இடங்களுக்குச் செல்லத்தவறிய அரசாங்க எழுதுவினைஞர்கள் தாமாகவே தமது பதவியை இழந்துள்ளனர் என்று பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

இவர்களுக்கான வேலைநீக்கக் கடிதங்களை அமைச்சு அனுப்பி வருகிறது. [இ]

## மின்வெட்டு ஏற்படும்அபாயம் சிக்கனம் கடைப்பிடிக்க ஆலோசனை

[கொழும்பு]

நாட்டில் விரைவில் மின்சார வெட்டு ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மின்சாரத்தை வெகுசிக்கனமாகப் பாவிக்குமாறு பாவனையாளர்களை மின்சாரசபை கேட்டுள்ளது.

காசில்றீ, லக்ஸபான நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைந்து வருவதால் மின்சாரப் பற்றுக்குறை ஏற்படும் என எதிர்பார்ப்பதாலேயே மின்சாரத்தை சிக்கனமாகப் பாவிக்குமாறு பாவனையாளர்களைக் கேட்டுள்ளது. [இ]

## மருதடிவிநாயகர் மகோற்சவம்

(பண்டத்தரிப்பு)

பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இம் மாதம் 29-ம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று, புதுவருடப் பிறப்பான 14-ம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

### அம்மன் ஆலய மகோற்சவம்

மாதகல் பாணவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 30-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்த மாதம் 9-ம் திகதி திங்கட்கிழமை தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

## மருத்துவத்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

வரும் சகமாணவர்களாலும் ஆசிரியர்களாலும் ஒருங்கே மதித்து அன்பு செலுத்தப்பட்டவருமான ராதா பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரும் ஓய்வு பெற்ற பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு.இராமசாமி பரமகுருவின் ஏக புதல்வனுமாவார். (அ)

இளவாலையில்

## பாப்பரசர் பிரதிநிதிக்கு மகத்தானவரவேற்பு

[பண்டத்தரிப்பு]

இவ்வுலகில் அன்பும் ஐக்கியமும் சமாதானமுமே சகலரையும் மேம்படுத்தி நல்வாழ்வு அளிக்க வல்லனவாகும் இவற்றை நாம் எமது அன்றாட வாழ்க்கையில் கைக்கொண்டு நடப்பதின்மூலம் எம்மை எதிர்நோக்கும் எப்பிரச்சினைகளையும் சமாளித்து அமைதியாக வாழமுடியும் என்று இளவாலை மறைமாவட்ட மக்களால் தமக்கு அளிக்கப்பட்ட மகத்தான வரவேற்பு உபசாரத்திற்கு நன்றி தெரிவித்து உரையாற்றுகையில் புனித பாப்பரசர் அருளப்பர் சின்னப்பரின் பிரதிநிதியான வணபிதா நிக்கொலோ ரொட்டுண்டோ குறிப்பிட்டார்.

இளவாலை கிர்ச் அன்னம்மாள் தேவாலய முன்றலில் இளவாலை சென்ஹென்றீஸ் கல்லூரி அதிபர் வண அன்ரன் இராசநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சில்லாலை, மாதகல் பண்டத்தரிப்பு பெரியவிளான் ஆகிய பகுதிகளிலிருந்து பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். பொது வரவேற்பினை அடுத்து பாடற்பூசையும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## இரணைதீவுக் கொலை வழக்கு:

# "அடிப்பார்கள் என்ற பயத்தால் பொலிஸுக்கு பொய் சொன்னேன்"

### எதிரி மாசலின் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

"அடிப்பார்கள் என்ற பயத்தால் பொலிசாருக்கு பொய் சொன்னேன். இறந்தவரிடம் நான் பணம் எதுவும் வாங்கவில்லை. அவருக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் இல்லை'

இரணைதீவு கொலைவழக்கில் சாட்சியமளித்த எதிரியான மரியான் மாசலின் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம் ஜாமீல் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. இவ்வழக்கில் 72 நவம்பர் 10ம் தேதி அந்தோனி மைக்கலைக் கொலைசெய்ததாக மரியான் மாசலின்மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது

எதிரி சார்பில் சட்டத்தரணி ஜிம்மி இராசரத்தினம் ஆஜரானர். அரச தரப்பில் சட்டத்தரணி ஆர் ஸ்ரீரஞ்சன் வழக்கை வடத்தினர்.

எதிரி மாசலின் மேலும் கூறியதாவது: 18ம் தேதி மரண விசாரணை முடிந்தது' பொலிசார் அன்று காலை என்னை பிஸ்காலிடம் ஒப்படைத்தார்கள். 15ம்தேதி சாவகச்சேரி நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லபபட்டேன். நான் கூண்டிலிருந்தபோது இன்ஸ்பெக்டர் வந்து கதைத்தார். நீதவான் கேட்டால் கொலை செய்தது நீதான் என்றுசொன்னால் ஒருமாதிரி பேசி சமாளித்துவிடுகிறேன் என்று இன்ஸ்பெக்டர் சொன்னர். நீதவானின் அறைக்கு என்னை அழைத்துச் சென்றனர். என்ன சொல்ல விரும்புகிறீர் என நீதவான் 3 தடவை என்னிடம் கேட்டார். இதுபற்றி ஒன்றும் தெரியாது இக்கொலைக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்று நீதவானிடம் கூறினேன். 3 தரம் நீதவான் கேட்டார். 2 தரமும் தெரியாது என்று பதில் சொன்னேன். கண்ணில் என்ன காயம் என்று நீதவான் கேட்டார். பொலிசாரும் பொதுமக்களும் அடித்ததாக சொன்னேன் இறந்தவருக்கும் எனக்கும் கோபதாபமில்லை அவர் எனது நெருங்கிய நண்பன். என்வீட்டிற்குத் திடீரென வருவார். குடிப்போம், புசிப்போம், முசுப்பாத்தியாகக் கதைப்போம், சிலசமயம் இரவில் தங்கி படுப்பதுமுண்டு

10ம் தேதி இரவு அவரை யாழ்ப்பாணம் போகவரும்படி நான் கேட்கவில்லை. 290 ரூபா திருப்பித்தருவதாக நான் அவரிடம் கடன் வாங்கியதாக பொலிசாருக்கு பொய்சொன்னேன். அடிப்பார்கள் என்று பயந்து சொன்னேன், நான் கடன்வாங்கவில்லை

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. [க]

## "கந்தபுராணத்தால் எந்தக் கருமமும் சித்தியாகும்"

(யாழ்ப்பாணம்)

"கந்தபுராண பாராயண மூலம் எந்தக் கருமத்திலும் சித்திபெறலாமென்பது வாழையடி வாழையாக நம் முன்னோர் கண்ட முடிவாகும். இன்றும் நாமும் நம் நாடும் நன்னெறியிற் சிறிதேனும் செல்வதற்குக் காரணம் ஆங்காங்குசான்றோர்கள் கந்தபுராண படனம் செய்துவருவதேயாகும்''.

மேற்கண்டவாறு கந்தபுராணப் பிரசாரசபையினர் யாழ்ப்பாணம் கொட்டடிபாலஞான வைரவசுவாமி கோவிலில் கொண்டாடிய கச்சியப்பசிவாசாரிய உபதேசகாண்ட அறிமுகவிழாவை ஆரம்பித்து வைத்த சைவப்புரவலர் சிவமணி வே. கந்தசாமி உரையாற்றும் போது கூறினர்.

கந்தபுராணத்தின் இறுதிப் பகுதி உபதேசகாண்டம். அது நாவலரால் உச்சிமேல் வைத்துக் கொண்டாடப்பெற்றது. இன்று எவரும் அறியாத நூலாகிவிட்டது. அதனை எங்கும் பரப்பக் கந்தபுராணசபை நடவடிக்கை எடுக்கும் என அவர் கூறினர்.

வைத்தியகலாநிதி சித்தாந்த பண்டிதர் நா கனகரத்தினம், சைவத்தொண்டர் த கார்த்திகேசு, புகையிரத அதிபர் திரு மு. தியாகராசா, ஆசிரியர் திரு சி சிவரத்தினம், செல்வி மனோகரி கணேசசுந்தரம் ஆகியோர் உரையாற்றினர். கவிஞர் காரை செ சுந்தரம்பிள்ளையின் கந்த புராண கவிதாஞ்சலி, திரு கா. இரகுநாதன் குழுவினரின் பஜனை, அதிபர் திரு. க. தருமலிங்கம் குழுவினரின் புராணபடனம் சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளையின் உபதேசகாண்ட அறிமுகம் என்பனவும் இடம்பெற்றன. (அ)

## கொடிகாமம் நவீன சந்தை

[சாவகச்சேரி]

கொடிகாமம் நவீன சந்தை கட்டுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பூர்வாங்க நடவடிக்கையாகத் தற்போது பழைய கட்டிடங்கள் இடிக்கப்பட்டுவருகின்றன நவீன சந்தைக் கட்டிடத்திற்கு ரூபா 7 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பது தெரிந்ததே [அ]

## வீரமணியும், 58

# தி. மு. க.வினரும் கைது!

சென்னை, மார்ச். 22

ஈ. வெ. ரா. பெரியாரின் குடும்பத்தை இழிவுபடுத்தி எழுதிக்கொண்டிருக்கும் கவிஞர் கண்ணதாசனை ஆஸ்தான கவிஞர் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்று கோரி தமிழ்நாடு சட்டமன்றத்தின் முன்பாக மறியல் போராட்டம் நடத்திய திராவிடர் கழக பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணியும், கழகத் தொண்டர்கள் 58 பேரும் நேற்று கைது செய்யப்பட்டனர்.

பெரியாரின் குடும்பத்தை இழிவுபடுத்தி கவிஞர் கண்ணதாசன் எழுதிக்கொண்டிருக்கின்றார் என்றும். இதனை உடன் நிறுத்தவேண்டும் என்றும் இதனைக் கண்டித்து சட்டமன்றத்தின் முன்பாக மறியல் செய்யப்போவதாகவும் சென்னையில் மூன்றுநாட்களுக்குமுன் திரு. வீரமணி அறிவித்திருந்தார்.

## அமிர் ஏப். 3க்குப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிருப்பார்கள்.

### கிறிஸ்தவ கல்லூரியில்

நேற்று சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் திரு. அமிர்தலிங்கம் தம்பதிகளுக்கு பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. பேராசிரியர்கள், மாணவர்கள் திரண்டு நின்று வரவேற்பளித்தனர்.

### கல்யாணசுந்தரம் ஆதித்தனர்

இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றி கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் திரு, கல்யாணசுந்தரமும் நாம் தமிழர் இயக்கத் தலைவரும், முன்னள் அமைச்சருமான திரு. ஆதித்தனர் ஆகியோர் திரு, அமிர்தலிங்கம் தம்பதிகளை சந்தித்து சுமார் ஒரு மணிநேரம் கலந்துரையாடினர்கள்.

இம்மாதம் 24ம் தேதி மீண்டும சென்னைவரும் திரு அமிர்தலிங்கம் தம்பதிகளுக்கு விமானநிலையத்தில் வரவேற்பு அளிக்கப்படும். 25ம் தேதி திரு. அமிர்தலிங்கம் தம்பதிகள் மதுரை மாவட்டத்திற்கு விஜயம் செய்வார்கள். மதுரை மாவட்டத்தில் பல கிராமங்களில் மரவேற்புகள் தி மு க கிளையினரால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

### மதுரை வரவேற்பு

மதுரை மாநகரசபை மேயர் திரு முத்து, மதுரையில் திரு அமிர்தலிங்கம் தம்பதிகளுக்கு பிரமாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளார். மதுரை மருத்துவக் கல்லூரியிலும் வரவேற்பு அளிக்க பேராசிரியர்கள் மாணவர்கள் ஏற்பாடுசெய்துள்ளனர், அன்றுமாலை பொதுக்கூட்டமொன்றை தி மு கவினர் ஒழுங்குசெய்துள்ளனர். பொதுக்கூட்டத்துக்கு முன்னர் ஊர்வலமொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## இளைஞரின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விஜயம் செய்தனர்.

சந்தேகத்தின் பேரில் ஒரு இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வாகனங்கள் வீடுகள் பலத்த சோதனைக்குள்ளாகின.

### விசேஷ விமானத்தில்

மந்திகை ஆஸ்பத்திரியில், மரணவிசாரணை நடைபெற்றது. விசேட விமானமூலம், சடலத்தை மட்டக்களப்பிற்கு அனுப்புவதற்கு பொலிஸார் ஏற்பாடு செய்திருந்தனர்.

### பிரயாணிகள் தாக்கப்பட்டனர்

சம்பவத்தின் பின்னர், பஸ் பிரயாணிகள்மீது பொலிஸார் நடத்திய தாக்குதலின்போது பிரயாணிகள் பலர் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

பஸ்ஸில் பிரயாணம் செய்த உதவி அரசாங்க அதிபர் ஒருவரும் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

காயமடைந்த சில பிரயாணிகள், ஆஸ்பத்திரிக்குச் சென்று சிகிச்சை பெற்றனர் என்றும் கூறப்படுகிறது.

(கொக். புலோ. உடு. க.)

## வண்ணை சிவன் இன்று கொடி

(யாழ்ப்பாணம்)

வண்ணை. ஸ்ரீ வைத்திஸ்வரசுவாமி கோவில மகோற்சவம் ஆரம்ப தினமாகிய இன்று காலை 8-30 மணிக்கு பஞ்சமூர்த்திகள் பூஜை ஆரம்பித்து பகல் 9-15 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) மாலை 6-30 மணிக்கு வசந்த மண்டப பூஜையாகி பஞ்சமூர்த்திகள் வெளி வீதிவலமாக வந்து நவசந்தி ஆவாகனம் நடைபெறும். (கை-அ)

## இராசதுரை அரசில் சேருவார்?

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு.செ இராசதுரை இன்று காலை பாராளுமன்றத்தில் அறிக்கையொன்றை சமர்ப்பித்து அரசாங்க கட்சியில் சேர்ந்து சுயேச்சையாக இயங்குவாரென்று அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்தவாரம் திரு. செ. இராசதுரை சபாநாயகர் ஜனுப் பாக்கிர் மார்க்காரை சந்தித்து தமக்கு தனி ஆசனம் ஒதுக்குவதுபற்றி கலந்துரையாடியாத தெரியவருகிறது.

அவருக்கு இன்று அரசாங்க தரப்பிலே ஆசனம் ஒதுக்கப்படாமென்றும் தெரிகிறது. [ம]

## பத்திரிகையாளர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சென்று, வழிபாட்டில் கலந்துகொள்வார்கள். அங்கிருந்து ராஜவீதி வழியாக புத்தூருக்குச் சென்று விவசாயிகளைச் சந்திப்பதுடன் பிரசித்திபெற்ற நிலாவரை, வற்றாத நீரூற்றையும் பார்வையிடுவார்கள்.

காலை 10 மணிக்கு மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்திற்கு விஜயம் செய்வார்கள். சாவகச்சேரியில், பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களைச் சந்திப்பர். அப்போது நண்பகல் போசன விருந்தளிக்கப்படும்.

பிற்பகல் 2 மணிக்கு சில்லாலைக்குப் புறப்படுவார்கள். சித்தஆயுள்வேத வைத்திய சங்கத் தலைவரின் இல்லத்தில் சங்கப் பிரதிநிதிகளைச் சந்திப்பார்கள் பிற்பகல் 6-30 மணிக்கு யாழ் அரசாங்க அதிபர் வாசஸ்தலத்தில் இன்னிசை விருந்தளிக்கப்படும்.

26ம் தேதி காலை 8-30 மணிக்கு நயினதீவுக்குப் புறப்படுவார்கள் நாகதீபத்தில் நடக்கும் வழிபாட்டில் கலந்து கொள்வார்கள் மண்டதீவிலுள்ள ஸ்ரீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிலையத்திற்கு விஜயம் செய்வார்கள்.

காலை 10-30 மணிக்கு நயினதீவிலிருந்து புறப்பட்டு குறிகட்டுவான் வழியாக ஊர்காவற்றுறைக்குச் செல்வார்கள். காரைநகர் சீநோர் திட்டத்திற்கும், கஜூ றிஞ் பீச்சிற்கும் செல்வார்கள்.

சித்தன்கேணியில் நண்பகல் போசனவிருந்தளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிற்பகல் 2-30 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு செல்வார்கள். பிற்பகல் 3-30 மணி முதல் 5 மணிவரை பல்கலைக்கழக உபவேந்தரையும் பல்கலைக்கழக மாணவர் மன்றத் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவார்கள்.

மாலை 6 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் கலைநிகழ்ச்சியில் கலந்துகொள்வார்கள்.

இம்மாதம் 27ம் திகதி காலை பத்திரிகையாளர் குழு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு புறப்படும். வழியில் பரந்தன் ரசாயன தொழிற்சாலைக்குச் சென்று பார்வையிடுவார்கள்.

தமிழ், சிங்கள, ஆங்கில தினசரி, வார இதழ்களின் செய்தி கட்டுரை எழுத்தாளர்கள் 30 பேர் இந்த விஜயத்தை மேற்கொள்கின்றனர் இந்திய பிரஸ்டிரஸ்ட் செய்தி ஸ்தாபன இலங்கை நிருபரும் இக்குழுவில் உள்ளார். [க]

## மற்றுமொரு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறையைச் சேர்ந்த வேலனை உதவி அரசாங்க அதிபர் திரு. தம்பிமுத்துவும் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

உதவி அரசாங்க அதிபர் என்று தம்மை அவர் அறிமுகஞ்செய்த பின்னரும் தாக்குதல் நடந்ததாம்.

வல்வெட்டித்துறைப் பகுதியில் சில வேலிகள் தீவைக்கப்பட்டுள்ளதாகவும், சாராயத் தவறணைக்கு அருகில் நின்ற சிலரும் தாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

(கொக்-நி)

## மன்னிப்புக்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

காஷ் நாராயண் காலமாகிவிட்டார்' என்று அறிவித்தார். இச் செய்தியைக்கேட்டு பிரதமர் அதிர்ச்சியடைந்தவராகக் காணப்பட்டார் பாராளுமன்றத்தில் இச்செய்தி அறிவிக்கப்பட்டதும், அகில இந்திய வானொலி இச்செய்தியை மறுத்து ஜெயப்பிரகாஷ் நாராயண் இன்னமும் உயிருடன் போராடிக்கொண்டிருக்கின்றார் என்றும் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட தகவல் உண்மையற்றது என்று செய்தி வெளியிட்டது.

இதன் பின்னர் முழுவிபரத்தையும் அறிந்து கொண்ட பிரதமர் மனம்நொந்து நேற்றுமாலை ஐந்து மணிக்கு பாராளுமன்றத்தின் விசேஷ கூட்டத்தைக்கூட்டி இத்தவறான செய்திக்காக தாம் மிகவும் வருந்துவதாகவும் லோக சபையிடமும், தேசத்திடமும் இதற்காக தாம் மன்னிப்புக் கோருவதாகவும் கூறினர்.

ஒரு தேசத்தலைவர் பற்றி பொறுப்பற்ற முறையில் பாராளுமன்றத்தில் தவறான தகவல் வெளியிட்டதற்காக அரசாங்கம் உடன் ராஜினமா செய்ய வேண்டும் என்று முன்னள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறியுள்ளார்.

## பிறந்த சிசு மறைந்தமாயம்

[யாழ்ப்பாணம்]

கொடிகாமத்தைச் சேர்ந்த தனபாலசிங்கம் யோகம் என்பவர் நேற்று முன்தினமிரவு யாழ் அரசினர் ஆஸ்பத்திரி முதலாம் வார்ட்டில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டு, ஓர் ஆண்குழந்தையைப் பெற்றார், இக்குழந்தை பிறந்த சில மணி நேரத்தில் காணமற்போய்விட்டதாம்.

இதுவிஷயமாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

[கொக் நிரு]

## காணவில்லை

யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய் செல்லும் பஸ் வண்டியில் பாஸ்போட் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். ஆர். டி. சாமுவேல், தொழிற்பேட்டை வீதி, அச்சுவேலி.

1977

## கண்டெடுத்த சைக்கிள்

[சாவகச்சேரி]

யாழ்-கண்டி வீதியில் கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கண்மையில் ஒரு புத்தம் புதிய சைக்கிள் பொது மக்களால் கண்டெடுக்கப்பட்டு, மீசாலை வடக்கு கிராமசேவையாளர் திரு. க. சின்னையாவால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வாகனத்தில் கொண்டு செல்லும்போது இது தவறி விழுந்திருக்கலாமென்று சந்தேகிக்கப்படுகிறது. [கு]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegram Eelanadu, Telephone: 389.